**27.06.2022**

**அ.வ.எண். <u>194/2015</u>**

**<u>வா.சா. 2 கிருஷ்ணன் அவர்களின் 1ம்,3ம்,4ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதியாக இருக்கும்போது மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி தரப்பில் ஏன் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் 1ம் வாதி ராஜா அழைத்தன் பேரில் தாவா சொத்து 1ம் வாதி ராஜாவின் சொத்து என்பதால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள கிரைய உடன்படிக்கை சம்பந்தமாக எனக்கு அறிவிப்பு எதுவும் வரவில்லை. தற்போது தாவா சொத்திற்கான பட்டா 1ம் வாதி ராஜா பெயரில் உள்ளது. அந்த பட்டாவை நான் பார்த்ததில்லை. பட்டாவை பார்க்காமல் ராஜா பெயரில் பட்டா உள்ளது என்று நான் சொல்வது தவறு என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கு பக்கமாக கல்யாணி என்பவர் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு வீடு கட்டி உள்ளார். கல்யாணியின் வீடு ஆதியில் வாதிகளுக்கு சொந்தமானது என்றால் சரிதான். அந்த வீடு சம்பந்தமாக வாதிகள் கல்யாணிக்கு கிரைய பத்திரம் எழுதி கொடுத்தார்கள். எப்போது எழுதி

கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. வாதிகள் கிரையபத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்று கல்யாணி எனக்கு கூறினார். எந்த வருடம் என்று கூறவில்லை. வா.சா.ஆ.4 கல்யாணியின் உடன்பிறந்தவர்கள் விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தது போல் உள்ளது என்றாலும் வாதிகள் கல்யாணிக்கு கிரைய பத்திரம் எழுதி கொடுத்தது போல் இல்லை என்றாலும் சரிதான். எனவே நான் சொல்வது போல் வாதிகள் கல்யாணிக்கு எந்தவொரு கிரையபத்திரம் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கல்யாணிக்கு வாய்மொழியாக கிரையம் கொடுத்து அவர் அந்த வீட்டை அனுபவித்து வருவது போல் தான் தாவா சொத்தை வாதிகள் 1ம் பிரதிவாதிக்கு வாய்மொழியாக கிரையம் கொடுத்து அவர் அதை அனுபவித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. 1989ம் ஆண்டு 1ம் பிரதிவாதி தாவா சொத்திற்கு சரியான கிரைய தொகை கொடுத்து தாவா சொத்தினை கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றாலும் தாவா சொத்தை விற்பனை செய்ததை திரும்ப பெறவேண்டும் என்பதற்கு வாதிகள் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல. சுமார் 10 அல்லது 15 வருடத்திற்கு முன்பு கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றப்பட்டது. 1ம் பிரதிவாதி தாவா சொத்தினை முறையாக கிரையம் பெற்று

அனுபவத்தில் இருந்ததால் தான் சரியான முறையில் விசாரணை செய்து சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு அவருக்கு தாவா சொத்திற்கான பட்டா வழங்கப்பட்டது என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் மறைமுகமாக லாபம் பெறவேண்டும் என்று எனது உடன்பிறந்த சகோதரர் 1ம் பிரதிவாதிக்கு எதிராக வாதிகளுடன் கூட்டு சேர்ந்து நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் சட்டத்தின்படி செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல.